செ.வெ.எண்: 43 நாள்:23.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.சே.தனசேகரன் அவர்கள் தலைமையில் இன்று (23.02.2018) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தலைமையில் இன்று (23.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்தும், கால்நடைகளுக்கு தீவன மேலாண்மை பற்றியும் செயல் விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது. பார்பனச்சேரி கிராமத்தைச் சேர்ந்த தமிழரசன் என்ற விவசாயின், இயற்கை விவசாய முறைகளை படக்காட்சியாக தொகுத்து காண்பிக்கப்பட்டது. வேளாண் சார்ந்த சந்தேகங்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் (பொ) அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 25.78 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 1059 மெ.டன் யூரியா, 492 மெ.டன் டி.ஏ.பி, 497 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 778 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் 244 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 98 மெ.டன் என கூடுதலாக 342 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 11 மெ.டன் மற்றும் தனியார் கடைகளில் 4 மெ.டன் ஆக மொத்தம் 15 மெ.டன் நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது.

**மானிய விலையில் நுண்ணீர் பாசனத் திட்டம் :-** தற்போது பருவமழை குறைவாக கிடைத்து வருவதால் நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதற்கு ஏற்றாற் போல் வேளாண் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கில் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறைகள் மூலம் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன கருவிகளை அமைக்க விவசாயிகளுக்கு அரசு மானியமாக நமது மாவட்டத்திற்கு ரூ.7.92 கோடி நிதி இலக்கு ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது.

சிறு / குறு ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் பாசன கருவிகளை தங்களது வயல்களில் நிர்மானித்துக்கொள்ள மானியம் அனுமதிக்கப்பட்டு வருகிறது. 75 சதவீத மானியத்தில் பயன்பெறும் இதர விவசாயிகள் மீதிப் பங்குத் தொகையை வங்கி வரைவோலையாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகள் வருவாய்த்துறையில் சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெற்றிட சொந்த நிலத்தில் பயிர் சாகுபடி செய்து வருவதற்கான சிட்டா மற்றும் அடங்கல், வயல் வரைபடம் மற்றும் மின் இணைப்புடன் நீர் ஆதாரம் உள்ளமைக்கான சான்றுகளுடன் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற இதர ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர் (வேளாண்மை) சு.அய்யாசாமி, இணைப்பதிவாளர் (கூட்டுறவுசங்கங்கள்) இரா.தயாளன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளஆதாரம்) ஆ.தெய்வீகன், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அன்புராஜன், வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி கோ.அழகுகண்ணன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.